# விஷக்கடி மருந்துகளும், மூலிகைகளும்

## பாம்புக்கடி

கருந்துளசி அல்லது வெண்துளசி இடித்துச் சாறு பிழிந்து ஒரு இரண்டு ஸ்பூன் கொடுக்கலாம்.

வாழைத் தண்டுச் சாறு இடித்து கொடுக்கலாம்.

பாம்பு கடித்தவுடனே கடிபட்ட பகுதியினை மண்ணெண்ணையை ஒரு துணியில் தடவி அமிழ்த்து வைக்க வேண்டும்.

கொளுக்கி இலைகளைப் பறித்து 1 பிடி விழுதுபட அரைத்து சாப்பிடலாம். அதேபோல அன்று உப்பு, புளி சேர்க்காமல் கஞ்சி காய்ச்சி குடிக்கலாம்.

பெரியாள் நங்கை அல்லது சிறியாள் நங்கை இலையை எடுத்த சுத்தம் செய்து அரைத்து சாப்பிட கொடுக்கலாம்.

பாம்பு கடியினால் தலைக்கு விஷமேறியவுடன் மயக்க நிலையுண்டாகும். அந்த நேரம் வாழை மட்டைகளைப் பரப்பி அதன் மேல் நோயாளியைப் போட்டால் விஷம் முறியும்.

அருகம்புல்லை அரைத்து கடித்த இடத்தில் வைத்துக் கட்டினால் விஷம் குறையும். அதேபோல பாம்புக்கடி பட்டவருக்கு மயக்கமுண்டானால் அருகில் இருப்பவர்கள் அருகம்புல்லை எடுத்து நசுக்கி அல்லது மென்று அந்தச் சாற்றை கடிபட்டவர் மூக்கில் விடவும். உடனே விஷம் குறைந்து மயக்கம் தெளிவுறும்.

## நாய்க்கடி குணமாக

நாட்டுக் கோழியுடைய மலத்தை நாய்கடிபட்ட இடத்தில தொடர்ந்து ஐந்து நாட்கள் கட்டிரவ நாய்க்கடி மிக விரைவில் குணமாகும்.

பிரண்டை இலையை மஞ்சுளுடன் சேர்த்து வைத்து அரைத்து கடிபட்ட இடத்தில் கட்டி வந்தால் குணமாகும்.

நாய் கடித்தவுடன் கடிபட்ட இடத்தில் இருந்து இரத்தம் வந்தால் அந்த இடத்தை நன்றாக சுத்தம் செய்து, ஒரு வெங்காயத்தை எடுத்து அரைத்து தேனுடன் கலந்து நாய்கடிபட்ட இடத்தில் தொடர்ந்து கட்டிரவ நஞ்சு கலந்த விஷம் இறங்கி மிகவிரைவில் புண் குணமாகும்.

நாய் கடித்தால் முருங்கை இலையுடன், புண்ணாக்கை சம அளவு எடுத்து தன்னுடைய சிறுநீர் விட்டு அரைத்து கொதிக்க வைத்த பின்பு நாய்கடித்த இடத்தில் பூசி வரவும்.

## <u>தேள், பூரான், கொடுக்கான் கடித்தால் குணமாக</u>

ஈரவெங்காயத்தை எடுத்து இடித்து கடித்த இடத்தில் வைத்து சிறிது நேரம் தேய்த்து வந்தால் கடித்த இடத்தில் உண்டான கடுப்பு உடனே மாறும்.

சுண்ணாம்பையையும் கடிபட்ட இடத்தில் தடவலாம்.

தும்பை இலையை பிடிங்கி அரைத்து கடிபட்ட இடத்தில் தடவினால் கடுப்பு தணியும்.

ஒரு மஞ்சள் துண்டை எடுத்து சிறுநீர் விட்டரைத்து கொதிக்க வைத்து அதைக் களிம்பு போல மாற்றி கடிபட்ட இடத்தில் தடவினால் கடுப்பான குணம் மாறும்.

## <u>மட்டத்தேள், நண்டு, நட்டுவாய்க்காலி, தேனீ, குளவி, கடிக்குண்டான மருந்துகள்</u>

நான் மேலே கூறிய பூச்சிகளில் ஏதேனும் ஒன்று கடித்துவிட்டால் உடனே சுண்ணாம்பை பூசிவிட்டு கத்திரிக்காயை சுட்டு கடித்த இடத்தில் தேய்த்து அல்லது கட்டினால் மிக விரைவில் குணமாகும்.

உருளைக் கிழங்கை தோல்சீவி அரைத்து கடித்த இடத்தில் தேய்த்து வந்தால் மிக விரைவில் குணமாகும்.

பெருங்காயத்தை நீரில் கரைத்து கடித்த இடத்தில் தடவலாம்.

ஆதேபோல ஒரு துணியில் மண்ணெண்ணெயை நனைத்து கடிபட்ட இடத்தில் தடவலாம்.

## நச்சுத்தன்மை பொருந்திய எந்த பூச்சிகள் கடித்தாலும் பொதுவான சிகிச்சை முறைகள்

பச்சையாக வாழைத்தண்டு மட்டையை எடுத்து இடித்துச் சாறுபிழிந்து அதனுடன் நெல்லிக்காயைச் சாறுடன் கலந்து 1 டம்ளர் அளவு குடித்தால் அனைத்து விதமான நஞ்சு தன்மைகளும் மாறும்.

மஞ்சளுடன் சிறிது பசுவின் சாணத்தை சேர்த்து நன்றாக அரைத்துக் கடிபட்ட இடத்தில் பூசிவரலாம்.

குப்பைமேனி இலையை எடுத்து அரைத்துச் சாறு எடுத்து கடித்த இடத்தில் பூசி வர விஷத்தன்மை மாறும்.

அதேபோல மஞ்சள், உப்பு, சுண்ணாம்பு இவைகள் அனைத்தும் சமஅளவுகள் எடுத்து கலந்து கடிபட்ட இடத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் பூசி வர விஷத்தன்மை மிக விரைவில் குணமாகும்.

தும்பை இலைகளைச் சுத்தப்படுத்தி இடித்து சாறு பிழிந்து அதனை எடுத்துக் கொண்டு கடிபட்ட இடத்தில் பூசி வர வேண்டும்.